**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | CC No.12/18 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.2 |
| பெயர் | சிவக்குமார் | கிராமம் | |
| தந்தை / கணவர் பெயர் | ரெங்கசாமி | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.G.Pandiarajan, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 03.02.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1– Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.

Aadhar card of the Witness verified.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் புதுக்கோட்டை மாவட்டம் மேட்டுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 12.11.2016 தேதியில் மாலை 4.15 மணியளவில் புதுக்கோட்டை - ஆலங்குடி செல்லும் ரோட்டில் அசோக்நகர் கல்லறை தோட்டத்திற்கு எதிரே என்னுடைய மகள் ஞானசிந்து என்பவர் Hero pressure இரு சக்கர வாகனத்தில் என்னுடைய மற்றொரு மகள் தீபிகா என்பவரை பின்னால் அமர வைத்து சென்று கொண்டிருந்தார். என்னுடைய மகள் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனத்திற்கு பின்னால் வந்த டிப்பர் லாரி TN 65 U 1595 என்ற பதிவெண் கொண்ட வாகனம் ஹாரன் எதுவும் அடிக்காமல் வேகமாக சென்று எனது மகள் சென்ற இரு சக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டது. ஞானசிந்துவிற்கு வலது கையில் அடிப்பட்டது. என்னுடைய சின்ன மகள் தீபிகாவிற்கு இடுப்பிலும் கால்களிலும் அடிப்பட்டது. உடனடியாக BeWell மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அதன்பிறகு மேல் சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். நான் எனது மகள்களை BeWell மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். எனக்கு எனது அண்ணன் மகன் பரணிதரன் மேற்படி சம்பவம் குறித்து

தகவல் தெரிவித்தார். என் மகள் தீபிகாவிற்கு உடல்நிலை மோசமாக இருந்ததால் தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்கு சேர்த்தோம். மீண்டும் புதுக்கோட்டை மருத்துவமனைக்கு தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் இருந்து எனதுமகளை திருப்பி அனுப்பிவிட்டார்கள். எனது மகள் தீபிகா புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனளிக்காமல் 13.11.2016தேதியில் காலை 7.10 மணியளவில் இறந்துவிட்டார். அங்கு அவருக்கு பிரேத விசாரணை மற்றும் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

இரு சக்கர வாகனத்தை விபத்து சமயத்தில் ஓட்டி சென்ற எனது மகள் ஞானசிந்து என்பவருக்கு அந்த சமயத்தில் இரு சக்கர வாகனத்தை ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி விபத்து இரு சக்கர வாகனத்தை இயக்க தெரியாமல் எனது மகள் ஓட்டியதன் காரணமாகவே ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

Sd/- சிவக்குமார்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/- திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.